## 150. என் முன்னே உம்மை

### பல்லவி

என் முன்னே உம்மை நிறுத்தியுள்ளேன்
என் வலபக்கத்தில் நிழலாய் இருக்கின்றீர்
நான் அசைக்கப்படுவதில்லை – 2

### சரணங்கள்

1. சூழல்காற்று எனக்கு விரோதமாய்
என் படகை சேதப்படுத்த வந்தாலும்
இயற்கையெல்லாம் அடக்கி ஆளும்
என் ஆண்டவர் என் படகிலே
- என் முன்னே

2. கடலில் அலைகள் கொந்தளித்தாலும்
தண்ணீரால் என் படகு நிரம்பினாலும்
காற்றையும் கடலையும் அதட்டினவர்
என் படகில் மாலுமியானார்
- என் முன்னே

3. பயப்படாதே நான் உன்னோடு
திகையாதே நான் உன் தேவன்
மகா பெரிய பலனும் அடைக்கலமாய்
நான் உன்னோடு இருப்பேன் என்றீர்
- என் முன்னே